செ.வெ.எண் : நாள் : 14.09.16

**விருதுநகர் மாவட்டம்**
**உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மூலம்**
**நெடுஞ்சாலை ஹோட்டல்களில் தரம் மற்றும் சுகாதார வசதி குறைபாடு குறித்து**
**விழிப்புணர்வு ஒருநாள் கல்வி கருத்தரங்கம்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அ.சிவஞானம்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்கள்.**
---

விருதுநகர் மாவட்டம் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மூலம் தமிழ்நாடு தொடக்கக் கல்வி ஆசிரியர் கூட்டணி அரங்கத்தில், நெடுஞ்சாலை ஹோட்டல்களில் தரம் மற்றும் சுகாதார வசதி குறைபாடு குறித்து நுகர்வோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த நடைபெற்ற ஒருநாள் கல்வி கருத்தரங்கினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அ.சிவஞானம்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (14.09.2016) துவக்கி வைத்து தெரிவித்ததாவது :-

நமது இந்தியா ஒரு மக்களாட்சி கொண்ட நாடாகும். இத்திருநாட்டில் மக்களை ஆளுவதற்கு மக்களே தங்களுக்கு தேவையான மக்கள் பரதிநிதிகளை தங்களிடம் உள்ள வாக்குரிமை மூலம் மக்களே தேர்ந்தெடுத்தெடுக்கின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆட்சி அமைத்து அரசாங்கத்தை நடத்துகின்றனர்.

எனவே மக்கள் முதலில் அவர்களது அடிப்படை உரிமைகள், கடமைகளை தெரிந்து கொள்ள வேண்டும். மக்களின் நன்மைக்காகவும், சமுதாயத்தின் நன்மைக்காகவும் பல்வேறு துறைகளும்,சட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. உணவு பாதுகாப்புதுறை மூலம் கலபடம் செய்யப்பட்ட உணவு வகைகள், உடலுக்கு ஊறு விளைவிக்கும் பொருட்களை உற்பத்தியோ, விற்பனையோ செய்வது, தடைசெய்யப்பட்ட பொருட்களை விற்பது, உணவு பொருட்கள் தயாரிப்பில் தடை செய்யப்பட்ட பொருட்களை சேர்ப்பது போன்றவற்றை தடுத்து தரத்தினை பாதுகாத்து மக்களுக்கு சுத்தமான தரமுள்ள கலப்படமற்ற உணவு வகைகள் கிடைக்க வழி செய்வதே அரசின் முக்கிய நோக்கமாகும். உணவுக்கடைகளில் விற்கப்படும் உணவுப் பொருட்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில் நெடுஞ்சாலை உணவகங்களில் இந்த விதிமுறைகள் சரியாக பின்பற்றப்படுகிறதா என்பதை உணவு பாதுகாப்புத்துறை அலுவலர்கள் ஆய்வு செய்து நுகர்வோர் பிரச்சனைகளை தீர்த்திட ஏதுவாக நெடுஞ்சாலைகளில் செயல்படும் ஹோட்டல் உரிமையாளர்களுக்கும், நுகர்வோர்மன்றங்களுக்கும், பொதுமக்களுக்கும் விழிப்புணர்வு அளிக்க வேண்டிய அவசியமாகிறது.

இதுபோல் போக்குவரத்துத் துறை, தொழிலாளர் நலத்துறை, காவல்த் துறை போன்ற பல்வேறு அரசு துறைகளுக்கு சில விதிமுறைகளும், சட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. சட்டங்கள் எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதோ அதை புரிந்து கொண்டு பின்பற்றி நடக்க வேண்டும். நமக்காக உருவாக்கிய சட்டங்களை நாமே மதிக்காமல் இருப்பதால் விதிமீறல் ஏற்படுகிறது. சட்டத்தின் முன் அனைவரும் சமம். ஒவ்வொரு துறையிலும் விதிமுறைகளையும், சட்டங்களை மீறுபவர்களை கண்காணிப்பதற்கு சில அமைப்புகளும், அந்தந்த துறையை சேர்ந்த கண்காணிப்பாளர்களும் உள்ளனர். எடுத்துகாட்டாக போக்குவரத்து விதிமுறையை கண்காணிப்பதற்காக போக்குவரத்து ஆய்வாளரும், உணவகங்களில் விதிமுறைகள் சரியாக பின்பற்றப்படுகிறதா என்பதை கண்காணிப்பதற்காக உணவு பாதுகாப்புத்துறை அலுவலர்களும் உள்ளனர். எனவே எந்த விதிமீறல் நடைபெறும் போது நீங்கள் பார்த்தாலோ அல்லது உங்களுக்கு செவி வழிச் செய்தியாக வந்தாலோ அதனை உறுதி செய்து எழுத்து பூர்வமான கடிதத்தினை தயார் செய்து சம்மந்தப்பட்ட அரசு அலுவலர்களை தொடர்பு கொண்டு தெரிவிக்க வேண்டும்.

இந்த கருத்தரங்கின் முக்கிய நோக்கமே இங்கு வருகை தந்துள்ள ஹோட்டல் பணியாளர்கள், நுகர்வோர் ஆர்வலர்கள், நடத்துனர் மற்றும் ஓட்டுநர் போக்குவரத்து பணியாளர்கள், கல்லூரி மாணவர்கள், உணவு பாதுகாப்புத்துறை தொழிலாளர்கள் ஆகியோர்கள் உணவு கலப்பட தடுப்பு சட்டம், மோட்டார் வாகன தடைச்சட்டம், எடை மற்றும் அளவுகள் தர நிர்ணயச் சட்டம் ஆகிய சட்டங்களை பற்றியும், அவற்றின் விதிமுறைகளைப் பற்றியும் முழுமையாக தெரிந்து கொண்டு அதை தவறாமல் பின்பற்றி பிறருக்கும் நமக்கென்ன கடமைகள், உரிமைகள் உள்ளது என்பதை எடுத்து கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தி ஒரு அமைதியான, சிறப்பான சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

முன்னதாக நுகர்வோரின் பாதுகாப்பு சேவை மைய மாநில தலைவர் திரு.சுப்பிரமணியம் அவர்கள் ”நுகர்வோரின் கடமைகள்,நுகர்வோரும் சரியான தேர்வு செய்தலும், என்ற தலைப்பில் நுகர்வோரின் கடமைகள் பற்றி எடுத்துரைத்தார். வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.சோமசுந்தரம் அவர்கள் போக்குவரத்து விதிமுறைகளை பற்றி எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.முத்துகுமரன், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.செந்தில் ஆறுமுகம், மாவட்ட உணவு பாதுகாப்பு துறை நியமன அலுவலர் மரு.சாலலோடீசன், தொழிலாளர் நலத்துறை ஆய்வாளர் திரு.ராம்ராஜ், விருதுநகர் வட்ட வழங்கல் அலுவலர் திரு.அய்யக்குட்டி, நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகளின் தலைவர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விருதுநகர்**